மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Shiva Worship in Sangam Literature

Dr. S. Jagadeesan

Assistant Professor, Department of Tamil, P.S.P.T MGR Government Arts & Science College, Sirkali, India

Manuscript ID : **MT127A0055**

Volume : **2**

Issue : **3**

Month : **September**

Year : **2022**

Received: 20.09.2022
Revised: 22.09.2022
Accepted: 24.09.2022
Published: 30.09.2022

Pages : 135-146

DOI: 10.5281/zenodo.7371976

ABSTRACT:

Along with internal and external principles of Tamils, people of the Sangam period lived with noble values like morality, culture and worship as social elements. Worship plays an important role in the life of Tamils. Gods such as Shiva, Murugan, and Indra were the primary gods believed to be worshiped in the life of the ancient Tamils. This article aims to know about the Tamil God Murugan among those Gods.

KEYWORDS:

Sangam Literature, Worship, Shiva, Shiva in Tolkapiyam, Worship Principle of Sangam Tamils

சங்க இலக்கியத்தில் சிவவழிபாடு

முனைவர் சி. ஜெகதீசன்,
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை, பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, சீர்காழி, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

தமிழரின் அகம் புறம் கோட்பாடுகளோடு அறம், பண்பாடு, வழிபாடுகள் போன்ற விழுமிய நெறிகளையும் சமூக கூறுகளாகக் கொண்டு சங்ககால மக்கள் வாழ்ந்துள்ளனர். தமிழர்களின் வாழ்வியல் கூறுகளில் வழிபாடுகள் முக்கிய இடத்தைப் பெற்றுத் திகழ்கிறது. சிவன், முருகன், இந்திரன் போன்ற கடவுளர்கள் பண்டையத் தமிழர்களின் வாழ்வியலில் வழிபாட்டிற்குரிய நம்பிக்கைக்குரிய முதன்மைக் கடவுளர்களாகும். அக்கடவுளர்களில் தமிழ்க்கடவுளாக முருகன் மக்கள் மனதினில் வீற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

கருச்சொற்கள்

சங்க இலக்கியம், வழிபாடு, சிவன், தொல்காப்பியத்தில் சிவன், சங்ககாலத் தமிழர்களின் வழிபாட்டு கொள்கை

முன்னுரை

பழந்தமிழ் நாட்டின் வரலாற்றுக் காலத்தைச் சங்க காலத்திலிருந்து தொடங்குவது வழக்கம். சங்க காலம் என்பது கி.மு.10 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி.இரண்டாம் நூற்றாண்டு வரை எனக் கணக்கிடுவர். இக்காலக் கட்டங்களில் தோன்றிய இலக்கியங்களைச் சங்க இலக்கியம் எனப் போற்றுவர். சங்க இலக்கியங்கள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்பனவாகும். இவ்விருவகை இலக்கியங்களில் சிவ வழிபாடு பரவலாகப் பேசப் பெறுகிறது. அவ்விலக்கியங்கள் காட்டும் சிவ வழிபாட்டு நிகழ்வுகளில் குறிப்பிட்ட செய்திகள் மட்டும் இங்கே சுட்டிக் காட்டப் பெறுகின்றன.

> **“கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு**
> **முன் தோன்றிய மூத்தகுடி”** (பு.வெ.மா)

என்று தமிழ்மொழியின் சிறப்பைப் போற்றுவர். தமிழ் மொழியில் தோன்றிய இலக்கியங்களால் தமிழ்மொழி பீடுநடைபோடுகிறது. இலக்கியம் என்பது “மக்களுடைய விழுமிய கருத்துக்களைச் செவ்வியச் சொற்களால் விளக்கும் கருவியாம்.”[1] தமிழர் தம் வாழ்வின் பண்பாட்டு அடையாளமாகத் திகழ்பவை சங்க இலக்கியங்களாகும்.

இந்நூற்கள் காலத்தைப் பிரதிபலித்துக் காட்டுவதோடு மனிதனின் அகம் மற்றும் புற வாழ்க்கையைச் சித்தரித்துக் காட்டுகிறது. சமூகத்தின் சரியான வளர்ச்சி நிலைக்குச் சமயங்கள் அடிக்கல்லாக விளங்குகின்றன.

வழிபாடு விளக்கம்

மனித இனம் தோன்றியக் காலம் முதல் வழிபாடு இருந்து வருகிறது. மனிதனின் பிறப்பு, இறப்பு, உணவு ஆகிய மூன்று அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்காகத் தோன்றியது வழிபாடாகும். இறைவனிடத்தில் அன்பு செய்து போற்றி வழிபடுதலாகிய பக்தி நெறியே மனித வாழ்வின் உயிர்நிலை ஆகும். "உடலை வளர்க்க உணவுத் தேவைப்படுவது போல உயிரை வளப்படுத்த வழிபாடு தேவைப்படுகிறது"[2] என்பர். "இறைபேற்றிற்குரிய வழியை அடைவதற்கு மனிதன் மேற்கொள்ளும் செயல்முறைகளே வழிபாடு எனப்படும்."[3] வழிபாடு என்பது முன்னோர் காட்டிய வழிக்கண் படுதல் என்ற பொருண்மையது. "வழிபாடு என்ற சொல் இன்று தொழுதல், வணங்குதல் என்ற பொருளிலேயே பெரும்பாலும் வழங்கப்படுகின்றது."[4]

வழிபடு என்ற சொல் வழியிற் செல்லுகை, பின்பற்றுகை, வணக்கம் எனப் பலப் பொருள்களைத் தருகிறது. இவற்றின் வழி நோக்கின் வழிபாடு என்பது இறைவனைப் பூசனை செய்தல், வணங்குதல் என்பது புலனாகிறது. உண்மை பேசுவதே வழிபாட்டின் உயர்நிலை என்றும், பேரின்பத்தைக் கொண்டு வருவது வழிபாடு என்றும், இறைவனை நோக்கி உறுதியான பயணம் மேற்கொள்வதே ஒருமையுணர்வுடன் செய்யப்படுகின்ற வழிபாடு என்றும் அறிஞர்கள் கூறுகின்றனர்.[5]

வழிபாடு என்பது மனத்துடன் தொடர்புபட்ட ஒன்றாகவே அமைந்து விடுகிறது. தனி மனிதனைச் சமுதாய வாழ்வுடையவனாக்கி அவனை அன்பு, அருள், ஒழுக்கம் உடையவனாக மாற்றுவது வழிபாடு என்ற நம்பிக்கை இன்றளவும் இருந்து வருகிறது. வழிபாடு செய்வோன் உள்ளும், புறமும் தூய்மை உடையவனாக இருக்கவேண்டும். மனிதனுக்கு வாழ்க்கையில் கவலைகள் சிக்கல்கள் போன்றவை அதிகப்படும் போது வழிபாடுகளும் மிகுந்தன. ஆலயங்களில் உருவங்களை நிலைநிறுத்தி வழிபடுவது இந்துக்களின் மரபாகும். "வழிபாட்டின் சூழ்நிலை இறைவனுடன் இரண்டற கலந்து விடுவதாகும்."[6]

"தெய்வம் இகழேல்"[7] என ஆத்திசூடியும், "வைகல் தோறும் தெய்வம் தொழு"[8] எனக் கொன்றை வேந்தனும் பொதுமைப்படத் தெய்வ நம்பிக்கை ஊட்டுவதைக் காணலாம். "பூனைக் குட்டித் தன் பொறுப்பையெல்லாம் தாயிடம் ஒப்படைத்து விடுவது போன்று உனது பொறுப்பு அனைத்தையும் பகவானிடம் ஒப்படைத்து விட்டு அவரையே

சார்ந்திரு என்கிறார் இராமகிருஷ்ண பரமகம்சர்”[9]. அன்னாரது உபதேசத்தின் மூலம் இறைவழிபாட்டின் சிறப்பு விளங்குகிறது.

தொல்காப்பியர் நிலத்தைப் பற்றிக் கூறும்போது நிலத்தோடு தொடர்புடைய தெய்வங்களையும் இணைத்துக் கூறுகின்றார்.

“மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை, குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே” (தொல், பொருள், நூ.05)

தெய்வத்தை வாழ்த்துதலும், வழிபடு தெய்வம் நம்மைக் காக்கும் என்ற நம்பிக்கையும் தொல்காப்பியர் காலத்தில் இருந்திருப்பதை,

“வழிபடு தெய்வம் நிற்புறங் காப்ப” (தொல். பொருள். நூ. 422.)

என்னும் தொல்காப்பிய நூற்பாவால் அறியலாம். வழிபாடு என்பதற்குப் பல பொருள்கள் இருப்பினும் இறைவனையோ, அல்லது இறைவனோடு தொடர்புடைய உயிருள்ளவற்றையோ, உயிர் இல்லாதவற்றையோ வாயால், மனத்தால் வழிபடுவதே வழிபாடு என வழிபாட்டிற்கு ஒரு வரையறையை மேற்கூறிய விளக்கங்களால் அறிய முடிகின்றது.

வேறு வேறு பொருள்களின் மூலம் மனத்தால் மட்டும் உணர்ந்த கண்ணிற்குப் புலப்படாததுமான பற்பலத் தெய்வங்களும் அவற்றின் வழிபாடுகளும் தோன்றி வளர்வதற்குக் காரணமானது வழிபாட்டு நுட்பம் என்பதை,

“வேண்டுநர் வேண்டியாங் கெய்தினர் வழிபட
ஆண்டான் டுறைதலும் அறிந்த வாயே” (திருமுருகு, 248-249)

என்று திருமுருகாற்றுப்படை கூறுகிறது.

சிவன் என்ற பெயர்

சங்க காலத்தில் ‘சிவன்’ என்ற பெயர் இலக்கியங்களில் இடம்பெறாமைக்குப் பலவாறு விளக்கம் கொடுக்கப்படுகிறது. சங்கநூல்களின் கடவுள் கோட்பாடு பற்றி ஆராய்ந்த அறிஞர்கள் இவற்றில் தெய்வம், கடவுள் என்ற இருவேறு அம்சங்கள் காணப்படுகின்றன எனக்கூறி, தெய்வம் என்பது ஒரு நிலத்திற்குரிய தெய்வமாக மதிக்கப்பட, கடவுள் அதற்கப்பால் முழுமுதல் நிலையில் மதிக்கப்பட்டது என விளக்கம்

தந்துள்ளனர். மாயோன், சேயோன், கொற்றவை ஆகியோர் ஒரு நிலத்திற்குரிய தெய்வங்களாக விளங்கியதால்தான் இந்நூல்களில் அத்தெய்வங்கள் இடம்பெற்றன. சிவன் முழுமுதற் கடவுள் என்னும் நிலையில் பேணப்பட்டதால் பிற தெய்வங்களைக் குறிப்பிட்டது போல, சிவன் அந்நூல்களில் குறிப்பிடப்படவில்லை என்பது அவர்களது கருத்து ஆகும். இக்கருத்தினை முற்றிலுமாக நிராகரிப்பதற்கும் இடமில்லை. காரணம் வரலாற்றடிப்படையில் நோக்கும்போது சிவன் அகில இந்தியாவிலும் முதன்மை பெற்ற தெய்வமாகப் பேணப்பட்டான். சிவன் பற்றிச் சங்க நூல்களில் காணப்படும் பின்வரும் வருணனைகள் இதனை உறுதிசெய்கின்றன. தொன்முது கடவுள் (மதுரைக்காஞ்சி-41), கடவுணிலை இய கல்லோங்கு நெடுவரை (பதிற்றுப்பத்து-43;6), மழுவாணெடியோன் தலைவனாக (மதுரைக்காஞ்சி-455), ஆல்கெழு கடவுள் (திருமுருகாற்றுப்படை-256).

‘சிவன்’ என்ற சொல்

‘சிவன்’ என்ற சொல்லின் மூலம் எண்ணங்களும் வடிவமும் வழிபாட்டு முறைகளும் தமிழருக்கே தனித்தன்மை உடையனவாக உள்ளன. தமிழ்ச்சைவம் மற்றும் சித்தாந்தம் பற்றிப் பேசும் அறிஞர்கள், உருத்திரனோடு இணைத்தே சிவன் பற்றிப் பேசுகின்றனர்.

உருத்திரன், சிவன் என்னும் இரு சொற்களின் மூலமும் நிறமுடைமை என்ற பொருளின் அடிப்படையிலேயே பிறந்தன. இச்சொற்களைச் சிதைக்காமலே ஒன்றை ‘உரு’ என்னும் வேர்ச்சொல்லிலிருந்தும், மற்றொன்றைச் ‘சிவன்’ என்பதிலிருந்தும் பெறலாம். இரண்டும் நிறமுடைமையைக் குறிக்கும். (Maraimalai Adigal, ‘Preface’ Saivasiddantha as a Philosophy of Practical Knowledge, pp.3-5) அதாவது, தமிழகச் சைவசமயம் வேதகாலத்திற்கு முற்பட்டது என்பது உலகத்தாரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். இந்தச் ‘சிவ’ என்ற வடமொழி உரிச்சொல், திராவிட மூலச்சொல்லுக்கேற்ற ஒலிவடிவம் கொண்டு இலங்குகிறது என்பர் அறிஞர் சர் ஜான் மார்ஷல்.

தொல்காப்பியத்தில் சிவன்

தெய்வம், கடவுள், அமரர், இமையோர், அணங்கு, முனைவன் ஆகிய சொற்களால் இறைவனைக் குறிப்பிடும் தொல்காப்பியர், மாயோன், சேயோன், வேந்தன், வருணன், கொற்றவை எனத் தனிக் கடவுளர் பெயர்களையும் சுட்டுகிறார்.

“காலம் உலகம் உயிரே உடம்பே
பால்வரை தெய்வம் வினையே பூதம்
ஞாயிறு திங்கள் சொல்லென வரூஉம்
ஆயிரைந் தொடு பிறவும் அன்ன
ஆவயின் வரூஉங் கிளவியெல்லாம்

பால்பரிந் திசையா உயர்திணை மேன" (தொல்.எழுத்து, நூ.541)

என உயர்திணைப் பெயர்களைச் சுட்டுமிடத்துச் சில தெய்வப் பெயர்களைச் குறிப்பிடும் தொல்காப்பியர், கடவுள்வாழ்த்து பற்றிப் பேசும்போது,

"கொடிநிலை கந்தழி வள்ளியென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்தொடு கண்ணி வருமே" (தொல்.பொருள், நூ1034)

என்பார். கொடிநிலை, கந்தழி, வள்ளி என்ற மூன்றும் கடவுள் வாழ்த்துக்கு உரியன என்பதே இச்சூத்திரத்தின் பொருளாகும். தொல்காப்பிய உரையாசிரியர்களில் ஒருவரான நச்சினார்க்கினியர். 'கந்தழி' என்பது ஒரு பற்றுக் கோடின்றித் தானே நிற்கும் தத்துவம் கடந்த பொருள் எனத் தரும் விளக்கம் சைவத்தின் முழுமுதற் கடவுளாகிய சிவனுக்கு உரிய தன்மைகளோடு ஒத்து அமைகின்றது.

"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல் நூலாகும்" (தொல்.பொருள், நூ.1594)

என்ற தொல்காப்பிய நூற்பா சுட்டும். முனைவன் வினைகளால் பற்றப்படாமல் இருக்கும் தூய்மையானவன் ஆவான், இயல்பாகவே பாசங்களிலிருந்து நீங்கியவனாகப் பேரறிவு உடையவனாக இருத்தல் என்பது பதியின் இயல்பாகும் எனப் பின்னர் எழுந்த சைவசித்தாந்தச் சாத்திரம் உரைக்கிறது.

சங்க கால கடவுள் கொள்கை

சங்க கால மக்கள் தெய்வ நம்பிக்கையும், பக்தியும் கொண்டு வாழ்ந்துள்ளனர். தங்கள் முயற்சிகளின் வெற்றிக்கு உதவுவதற்காகவும், தீங்கு நேராமல் இருப்பதற்காகவும், இவ்வுலக மறுமையுலக வாழ்க்கை இனிதமைய வேண்டும் என்பதற்காகவும் தெய்வங்களை வேண்டி வழிபட்டனர். சங்க காலத்தில் கடவுள் நம்பிக்கை குறிப்பிட்ட பெயரில் சமயமாக உருவாகவில்லை. சங்க காலத் தமிழ் மக்களுக்கு சமயவெறியோ, சமயப்பூசலோ இருந்ததில்லை என்பதனைச் சங்க இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகின்றன. கடவுள் வழிபாடு தொடக்க காலத்தில் இயற்கை வழிபாடாகத் தொடங்கி முன்னோர் வழிபாடாக வளர்ந்து இன்று சமய நிலையாக ஏற்றம் பெற்றுள்ளது. சங்க இலக்கியங்களில் சிவன், முருகன், திருமால், கொற்றவை, இலக்குமி ஆகிய தெய்வங்களைப் பற்றியச் செய்திகள் இடம் பெற்றுள்ளமையும் அத்தெய்வங்களை வழிபட்டமையும் காணமுடிகிறது.

சிவ வழிபாடு

மனிதன் இறைபேற்றுக்குரிய வழியை அடைவதற்கு மேற்கொள்ளும் செயல்முறைகள் வழிபாடு எனப்படும். சங்க காலப் பாடல்கள் பல சிவனைப் பாராட்டுகின்றன. சிவலிங்க வழிபாட்டின் வளர்ச்சியாகச் சிவப்பரம் பொருளுக்குப் பலவிதமான வடிவங்கள் கூறப்பட்டன. சிவனை அம்பலத்தில் ஆடும் கூத்தனாகவும் வைத்து வணங்கும் வழக்கம் தோன்றியது. சிவனுக்கு அறுபத்து நான்கு வடிவங்கள் கூறப்பட்டன. இவற்றில் ஒன்பது வடிவங்கள் பெரும்பாலும் எல்லாத் திருக்கோவில் வழிபாட்டிலும் இடம் பெறுகின்றன.

சிந்துவெளி மக்களின் சமயம் வழிபாட்டு முறைகள் பற்றிய ஆய்வுகள் செய்யும் போது அவை உலகளாவிய தொடர்புடன் தமிழில் காணப்படும் சமயச் செய்திகளுக்குச் சான்றுகளாகவும் உள்ளன. சிந்துவெளி நாகரிகம் தமிழர் நாகரிகமே என்றும், சிந்து வெளியில் தமிழர் குடியேற்றம் கி.மு.10000 ஆண்டுகளுக்கு முன்பே நிகழ்வுற்றது என்றும் அறியக்கிடக்கின்றது. சிந்துவெளியில் கடவுள் பற்றிய பலச் செய்திகள் கூறப்பட்டிருந்தாலும் கொம்புகளுடன் விலங்குகள் புடைசூழ அமர்ந்திருக்கும் கடவுளின் உருவமே முதன்மையானதாக அறியப்பட்டுள்ளது. அக்கடவுளை பசுபதி, மகாயோகி, தட்சிணாமூர்த்தி, மகாதேவா, ருத்ரா எனப் பல்வேறு பெயர்களால் வரலாற்றாறிஞர்கள் குறிப்பிடுகின்றனர்[10]. அவர்கள் ஆரியக் கடவுளான ருத்ரனையும், தமிழ்க் கடவுளான சிவனையுமே இவ்வுருவம் தெளிவுபடுத்துவதாகக் கூறுகின்றனர். இரிக்கு வேதத்தில் சிவனை பற்றிய தெளிவான குறிப்புகள் இல்லை. ருத்ரன் என்ற கடவுளும், இரிக்கு வேதத்தில் சிறப்பிக்கப்படாமல் சிறிய கடவுள் என்ற அளவில் கூறப்பட்டிருக்கிறான். அதனால் சிந்து வெளியில் காணப்படும் உருவம் சிவனே எனக்கருத இடம் உண்டு.

சிந்து நாகரீகத்தில் சிவலிங்க வழிபாடு பெரு வழக்கமாய் இருந்தது என்பது அந்நாட்டில் கண்டெடுக்கப்பட்ட ஏராளமான சிவலிங்கங்களால் தெரியவரும். இக்கருத்தை சர்ஜான் மார்ஷல் உறுதிப்படுத்துகிறார். மொஹெஞ்சதாரோ, ஹராப்பாவில் பல சிவலிங்க வடிவங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. கல்லிலும், மண்ணிலும் சிவலிங்கங்கள் செய்யப்பட்ட நிலை இந்திய நாட்டில் ஆரியர் வருகைக்கு முன்னரே அமைந்த ஒன்று என்பர்.[11] எல்லா உயிர்க்கும் தாய் தந்தை போன்றவன் என்பதால் அம்மையப்பன் என்றும் வலப்புறம் தந்தைக் கூறும் இடப்புறம் தாய்க்கூறும் கொண்டதனால் மாதொருபாகன் என்றும் அழைக்கப்படுகிறார்.

சிவன் என்ற சொல் சங்க இலக்கியங்களில் குறிப்பிடப் படவில்லை. ஆயினும் “மழுவாள் நெடியோன் தலைவனாக” (மது.455,) என்று மதுரைக்காஞ்சியும், “இமையா முக்கண் மூவகையில் முருக்கிய முரண்மிகு செல்வனும்” (திருமுருகு, 256)என்று திருமுருகாற்றுப்படையும் “நீள் நிமிர் சடை முது முதல்வன்” (புறம்.198-9) என்று

புறநானூறும் குறிப்பிடுகின்றன. மேலும், ஆலமரச் செல்வன் (புறம், 6:18, ஆல்கெழு கடவுள்(புறம்,91:6), நீலமணி மிடற்றோன் (புறம்,56-2), மாற்றரும்கணிச்சி (மது.83), மழுவாள் நெடியோர், புறம், 166; 12) காரியுண்டிக் கடவுள்(மலைபடுகடாம்-83), என வரும் சங்க இலக்கியப் பெயர்களால் அக்காலத்தில் சிவன் வழிபட்டமையினை உணரலாம். புறக்கண்ணில் காண முடியாதவற்றையும் நெடுந்தொலைவில் உள்ளவற்றையும் கண்டறியும் ஓர் அறிவுக்கண் போன்ற உறுப்பு குமரி நாட்டு மக்கள் நெற்றியிலிருந்ததென்றும், அதனாலேயே அவர்தம் இறைவனுக்கும் ஒரு நெற்றிக்கண்ணைப் படைத்துக் கூறினாரென்றும் ஆராய்ச்சியாளர் கூறுகின்றார். சைவ சமயத்திலே அமைந்துள்ள இலிங்க (அருவுருவம்) வழிபாடு பசுபதி (உருவம்) எனப்படும் சிவ வழிபாடு ஆகியனவும், ஓராற்றான் சிவத் தொடர்புபடுத்திக் கூறப்படும் சக்தி வழிபாடு, சிவ வழிபாடு ஆகியன சிந்துவெளி, நாகரிகத்தின் முக்கிய சமயப் பண்புகளாக விளங்கின எனக் கூறப்படுவதால் சிவ வழிபாட்டின் தொன்மையினை உணரலாம்.[12]

பத்துப்பாட்டில் நான்கு இடங்களில் சிவன் பற்றியக் குறிப்புகள் காணப்படுகின்றன. அந்நூலில் ஐம்பூதங்களைப் "படைத்தமை, நஞ்சை உணவாகவும், நவிரத்தை உறைவிடமாகவும் கொண்டவை, இடபக் கொடியினை உடைமை, உமையொருபாகனாயினமை, முக்கண்களை உடைமை, முப்புரம் எரித்தமை, ஆலின் கீழ் இருந்தமை"[13] போன்றச் செய்திகள் குறிக்கப்படுகின்றன.

முனிவரால் வணங்கப்படும் மூன்று கண்களையுடைய சிவ பெருமானது கோயிலை வலம் வருவதற்கு வெண்கொற்றக் குடையானது பணிந்து தாழ்வதாகுக என்ற பொருளில்

"பணியியர் அத்தைநின் குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே" **(புறம். 6, 17-18)**

எனக் காரிகிழார் என்னும் புலவர் சிவனின் பெருமையை எடுத்துரைக்கிறார்.

சிவனை "பிறவா யாக்கைப் பெரியோன்"[14], என்கிறார் இளங்கோவடிகள். சிவலிங்க சொரூபம் சகல பொருள்களிலும் அணுவுக்குள் அணுவாய் அமைந்துள்ளது என்பது,

"ஆமப்பா சிவலிங்கமான மூலம்
அளவற்ற தேகமதற்கெல்லாம் ஆதி" (கௌசிக முனிவர்,ஞான சூத்திரம்,19.3,)

என்ற ஆன்றோர் வாக்கின் மூலம் தெரியவருகிறது. சிவனே கடவுளென்றும் அவன் பிறப்பு, இறப்பு இல்லாத நிலையானத் தன்மையுடையவன் என்பதை ஔவையார்,

"பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீலமணி மிடற்றொருவன் போல
மன்னுக பெரும நீயே" **(புறம். 91, 5-7)**

என்ற பாடலடிகள் மூலம் சிறப்பித்துக் கூறியுள்ளமையை அறிய முடிகிறது. சிவனின் பூமாலை, ஊர்தி, கொடி ஆகியவற்றைப் பற்றிக் குறிப்பிடும் புறநானூறு

"கண்ணி கார்நறுங் கொன்றை காமர்
வண்ண மார்பின் தாருங் கொன்றை
ஊர்தி வால்வெள் ளேறே சிறந்த
சீர்கெழு கொடியும் அவ்வேறு என்ப" **(புறம். கடவுள் வாழ்த்து, 1-4)**

எனக் குறிப்பிடுகிறது. சேரன் செங்குட்டுவன் சிவனின் அருளால் பிறந்தவன் என்பதை,

"செஞ்சடை வானவன் அருளினில் விளங்க
வஞ்சித் தோன்றிய வானவ" **(சிலம்பு 26; 98-99)**

எனச் சிலம்பு எடுத்துரைக்கிறது. "செங்குட்டுவன் சிவனையும், விஷ்ணுவையும் வணங்கியதையும் சிவனுடைய அடியைத் தலையிலும் விட்டுணுவின் மாலையைப் புயத்திலும் அணிந்ததை இளங்கோவடிகள் எடுத்துரைக்கின்றார்."[15] உலகத்தில் உள்ள எல்லாப் பொருள்களிடத்தும் மேவி இருப்பதோடு அவற்றைத் தன் உறுப்புகளாகக் கொண்டு விளங்கும் இறைவன் பெருமை பொருந்திய சிவனே என்பதை,

"மாநிலம் சேவடி ஆக, தூநீர்
வளை நரல் பௌவம் உடுக்கை ஆக
விசும்பு மெய் ஆக, திசை கைஆயள
பசுங்கதிர் மதியமொடு சுடர் கண்ஆக
இயன்ற எல்லாம் பயின்று; அகத்து அடக்கிய
வேத முதல்வன் - என்ப
தீது அறவிளங்கிய திகிரியோனே" **(நற். கடவுள் வாழ்த்து)**

எனப் பெருந்தேவனார் நற்றிணையில் குறிப்பிடுகின்றார். உமாதேவியாரை ஒரு பாகமாக உடையவனும் மூவகை உலக தோற்றத்திற்குக் காரணமானவரும் சிவன் என்பதை,

"நீல மேனிவாலிழை பாகத்து
ஒருவன் இருதாள் நிழற்கீழ்
மூவகையுலகு முகிழ்த்தன முறையே" **(ஐங். கடவுள் வாழ்த்து)**

என ஐங்குறுநூறு சுட்டுகிறது. மணிமேகலையிலும் சிவனின் அட்டமூர்த்தம் பற்றியக் குறிப்பும், இறைவன் உலகைப் படைத்தலையும், அழித்தலையும் ஒரு விளையாட்டாகச் செய்கின்றான் என்றும், பிறப்பு இறப்புக்களினால் ஏற்படும் களைப்பை நீங்குகின்றான் எனவும் சைவவாதிக் கூற்றாக,

“இரு சுடரோடு இயமானன் ஐம்பூதம் என்று
எட்டு வகையும் உயிரும் யாக்கையுமாய்க்
கட்டி நிற்போனும் கலை உருவினோனும்
படைத்து விளையாடும் பண்பினோனும்
துடைத்துத் துயர்தீர தோற்றத்தோனும்
தன்னில் வேறுதான் ஒன்று இலோனும்
அன்னோன் இறைவன் ஆகும் என்று உரைத்தனன்” (மணிமேகலை 27,89-95)

என்ற குறிப்பு உள்ளது.

சிவனை முக்கட்செல்வன் என்றும் அவன் தங்குமிடம் ஆலமுற்றம் என்பதையும்

“ஞாலம் நாறு நலங்கெழு நல்லிசை
நான்மறை முதுநூல் முக்கட்செல்வன்
ஆலமுற்றம்” **(அகம்.** 18,15-17)

என அகநானூறு கூறுகிறது. மணிமேகலையும் பல கடவுள்களின் கோயில்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. அவற்றுள்ளும் சிவன் கோயிலே முதலிடம் பெறுகின்றது என்பதை,

“நுதல்விழி நாட்டத்து இறையோன் முதலா
பதிவாழ் சதுக்கத்துத் தெய்வம் ஈறாக
வேறுவேறு சிறப்பின் வேறுவேறு செய்வினை
ஆறறி மரபின் அறிந்தோர் செய்யுமின்”

(மணிமேகலை, விழாவறை காதை, 54-57)

என முரசு செய்தி வழி அறியமுடிகிறது.

சிவன் ஆடிய மூன்று நடனங்களைப் பற்றி கலித்தொகை குறிப்பிடுகின்றது. கொடுகொட்டி என்னும் நடனம் சிவன் அனைத்தையும் அழித்த பிறகு ஆடுவதாகும். திரிபுரம் எரித்த பிறகு அரக்கர்களின் சாம்பலைப் பூசி சிவன் ஆடும் ஆட்டம் பாண்டரங்கம் எனப்படும். புலியைக் கொன்று அதன் தோலை ஆடையாக அணிந்தும் தோளில் கொன்றை மலர்களைச் சூடியும், கையில் பிரம்மாவின் கபாலத்தை ஏந்தியும்

சிவன் ஆடும் ஆட்டம் கபாலம் எனப்படும். இம்மூவகை ஆட்டங்களும் கலித்தொகை கடவுள் வாழ்த்தின் பின்பகுதியில் குறிக்கப்பட்டுள்ளன.

முடிவுரை

மனித இனம் தோன்றிய காலம் முதல் வழிபாடும் இருந்து வருகிறது. வழிபாடு என்பது மனத்துடன் தொடர்புடையது. வாழ்க்கையில் கவலைகளும், சிக்கல்களும் அதிகப்படும் போது வழிபாடுகளும் மிகுந்துள்ளன. சங்க கால மக்கள் தெய்வ நம்பிக்கையும், பக்தியும் கொண்டு வாழ்ந்துள்ளனர். கடவுள் வழிபாடானது இயற்கை வழிபாடாகத் தொடங்கி இன்று சமயநிலையாக ஏற்றம் பெற்றுள்ளது. சங்க இலக்கியங்களில் சிவன், முருகன், கொற்றவை, இலக்குமி, திருமால் ஆகிய தெய்வங்களைப் பற்றியும் வழிபாட்டையும் காணமுடிகிறது. பெண்ணைத் தெய்வமாகப் போற்றியத் சங்க இலக்கியங்கள் சிவனை பாராட்டுகின்றன. சிந்துவெளி நாகரிகத்தில் சிவலிங்க வழிபாடு இருந்தமை அங்கு கண்டெடுக்கப்பட்ட சிவலிங்கங்களால் தெரிய வருகிறது. பத்துப்பாட்டில் சிவன் பற்றியக் குறிப்புகள் காணப்படுகின்றன. உமாதேவியாரை ஒரு பாகமாக உடையவனும் மூவகை உலகத் தோற்றத்திற்குக் காரணமானவரும் சிவன் என்பதை ஐங்குறுநூறு குறிப்பிடுகிறது. இவ்வாறாக சங்க இலக்கியங்களில் சிவவழிபாடு இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

தொகுப்புரை

1. மனித இனம் தோன்றியக் காலம் முதல் வழிபாடு இருந்து வருகிறது. மனிதனின் பிறப்பு, இறப்பு, உணவு ஆகிய மூன்று அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்வதற்காகத் தோன்றியது வழிபாடாகும்.
2. தெய்வம் என்பது ஒரு நிலத்திற்குரிய தெய்வமாக மதிக்கப்பட, கடவுள் அதற்கப்பால் முழுமுதல் நிலையில் மதிக்கப்பட்டது என விளக்கம் தந்துள்ளனர்.
3. ‘சிவன்’ என்ற சொல்லின் மூலம் எண்ணங்களும் வடிவமும் வழிபாட்டு முறைகளும் தமிழருக்கே தனித்தன்மை உடையனவாக உள்ளன.
4. சங்க கால மக்கள் தெய்வ நம்பிக்கையும், பக்தியும் கொண்டு வாழ்ந்துள்ளனர். தங்கள் முயற்சிகளின் வெற்றிக்கு உதவுவதற்காகவும், தீங்கு நேராமல் இருப்பதற்காகவும், இவ்வுலக மறுமையுலக வாழ்க்கை இனிதமைய வேண்டும் என்பதற்காகவும் தெய்வங்களை வேண்டி வழிபட்டனர்.

சான்றெண் விளக்கம்

1. அ.ச. ஞானசம்பந்தன், இலக்கியக்கலை, ப.4.
2. மா. இராசமாணிக்கனார், வழிபாடு, ப.1.
3. தமிழகராதி, ப.3, 8.

4. நாகப்ப நாச்சியப்பன், திருக்கோவில் வழிபாடு, ப.2.
5. இரா. தண்டாயுதம், ஆலய வழிபாட்டில் தமிழ், ப.12.
6. ந. பிச்சமூர்த்தி (மொா.பெ.ஆ.) சமயமும் வாழ்க்கையும், ப.12.
7. ஆத்திச்சூடி, செ. 3.
8. கொன்றை வேந்தன், செ. 9.
9. இராமகிருஷ்ண உபதேச மஞ்சரி, ப.197.
10. எஸ்.ராமகிருஷ்ணன், சமய வாழ்வில் வடக்கும் தெற்கும், ப.1.
11. அ.மு. பரமசிவானந்தம், சமயமும் சமூகமும, ப.89.
12. க.கைலாசபதி பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும், ப.1.
13. மது. 453 - 455, மலை 82-83, திருமுருகு, 151-154.
14. சிலப்பதிகாரம், இந்திர விழாவூரெடுத்தக் காதை, ப.169.
15. சிலம்பு 26, 54-67.

துணைநூற்பட்டியல்

1. ஞானசம்பந்தன்.அ.ச, இலக்கியக்கலை, முல்லை நிலையம், சென்னை - 17.
2. இராசமாணிக்கனார்.மா, வழிபாடு, தமிழ்மண் பதிப்பகம், சென்னை - 17.
3. நாகப்ப நாச்சியப்பன், திருக்கோவில் வழிபாடு, உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை-113.
4. தண்டாயுதம். இரா, ஆலய வழிபாட்டில் தமிழ், சென்னை புத்தகாலயம், 1980.
5. இராமகிருஷ்ண உபதேச மஞ்சரி, ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திருச்சி -2014.
6. ராமகிருஷ்ணன். எஸ், சமய வாழ்வில் வடக்கும் தெற்கும், நியு செஞ்சுரி புக் ஹவுஸ் - சென்னை-98.
7. பரமசிவானந்தம். அ.மு, சமயமும் சமூகமும், பாரி நிலையம், சென்னை - 1958.
8. கைலாசபதி. க, பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும், குமரன் புத்தக இல்லம் - 1989.
9. வேங்கடசாமி நாட்டார், ந. மு (உ.ஆ)சிலப்பதிகாரம் மூலமும் உரையும், ராமையா பதிப்பகம், சென்னை - 14.
10. நீதி நூல்கள், ந.மு, வேங்கடசாம் உரையுடன், பாரி நிலையம், சென்னை.108.

REFERENCES

1. Gnanasampandan, A.S., Literary Arts, Mullai Station, Chennai - 17.
2. Rajamanikanar.ma, Worship, Tamilman Publishing House, Chennai - 17.
3. Nagappa Nachiyappan, Temple Worship, World Tamil Research Institute, Chennai - 113.
4. Weapons. Ira, Worship in Tamil, Chennai Buddha College, 1980.
5. Ramakrishna Upadesa Manjari, Sri Ramakrishna Daphovanam, Trichy-2014.
6. Ramakrishnan. S, North and South in Religious Life, New Century Book House - Chennai - 98.

7. Paramasivanandam. A.M., Religion and Society, Bari Station, Chennai – 1958.
8. Kailasapati. K, Ancient Tamil Life and Worship, Kumaran Book House -1989.
9. Venkatasamy Natar, N.M. (U.A.) Silapathikaram source and text, Ramaiah Publishing House, Chennai – 14.
10. Neeti Texts, N.M., with text by Venkatasam, Pari Station, Chennai. 108.